தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதி/**

**16 / 3, 24/12/ 2008 ஆம் நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

---

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86(1)(e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப்படிக்கப்படும் 61 (h) பிரிவின்படி, 2008 பிப்ரவரி 27ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் அது, இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகை செய்யும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியிடுகை செய்யப்பட்டுள்ளபடியாலும்,

தற்போது, அதற்காக, மேற்சொன்ன 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86 (1) (e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61 (h) பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும்

அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், 08.02.2008 நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/ மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதி/ 16/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 27.02.2008 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2ல் வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது.

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் (இரண்டாம் திருத்தம் ) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

b) இவை, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியில் ‘இரண்டாம் வாக்கியத்தில்’ ‘‘மூன்றாண்டுகளாக இருக்கலாம்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ வழக்கமாக இரண்டாண்டுகளாக இருக்கலாம்’’ என்று அமைக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்